## இராசிபுரம் நகராட்சி

### நகர்மன்ற சிறப்புக் கூட்ட அறிவிப்பு

2026–ஆம் வருடம் ஜுன் மாதம் 05–ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் சிறப்புக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் 02.06.2026

தலைவர்,
நகர் மன்றம்

### பொருள்

(1) இராசிபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 மற்றும் திடக்கழிவு மேலாண்மை சம்மந்தமான உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல் சம்மந்தமான கருத்துக்களை தெரிவிக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்துவது சம்மந்தமாகவும் இந்நகர் மன்ற சிறப்புக் கூட்டத்தை 05.06.2026 அன்று நடத்துமாறு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறையின் கடிதம் எண். 2/3/2023–SBM-IV-இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வருகின்ற 05.06.2026 அன்று நகர் மன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல், அதனைத்தொடர்ந்து 06.06.2026 திடக்கழிவு மேலாண்மை சம்மந்தமான நடவடிக்கைகளை பார்வையிடல் மற்றும் 07.06.2026 முதல் 12.06.2026 வரை நகர் மன்ற உறுப்பினர்கள் தங்களது வார்டுகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது சம்மந்தமான நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(337/2026/எச்1)

### தீர்மானம் எண். 876

திடக்கழிவு மேலாண்மைக் குறித்து உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களை, நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது என்பதை பதிவு செய்யப்படுகிறது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.